A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
– Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building, Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email : tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை:திரு. செ. தேவராஜன், மின்குறைதீர்ப்பாளர்**
**மேல்முறையீட்டு மனு எண் 32 / 2020**

திரு.K.செந்தில்குமார்,
த/பெ. பா.குப்புராவ்,
எண்.11/5, 2வது தெரு,
திருவள்ளுவர்புரம்,
தாம்பரம் (மேற்கு),
சென்னை– 600 045.

. . . . மேல் முறையீட்டாளர்
(திரு.K.செந்தில்குமார்)

எதிர்

மேற்பார்வைபொறியாளர்,
சென்னை மின் பகிர்மானவட்டம்/தெற்கு–II,
தமிழ்நாடு மின் உற்பத்திமற்றும் பகிர்மானகழகம்,
110 KV, துணை மின் நிலையவளாகம்,
கே.கே. நகர், சென்னை – 600 078.

. . . எதிர்மனுதாரர்
(திரு.M.S. பாரிராஜ்/செயற்பொறியாளர்/இ&ப/தாம்பரம்)

**கேட்புரை நாள்: 28–10–2020**

**ஆணை நாள் : 02–02–2021**

15.07.2020 அன்று பெறப்பட்ட திரு.K.செந்தில்குமார், த/பெ. பா.குப்புராவ், எண்.11/5, 2வது தெரு, திருவள்ளுவர்புரம், தாம்பரம் (மேற்கு), சென்னை– 600 045 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண். 32/2020 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 28.10.2020 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

### 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:

மேல்முறையீட்டாளர் தனது வீட்டிற்கு ஒருமுனை மின் இணைப்பு வேண்டி விண்ணப்பித்த விண்ணப்பத்தின் மீது நடவடிக்கை எடுக்காதது குறித்து உரிய இழப்பீடு வழங்க வேண்டியுள்ளார்.

### 2.0 வழக்கின் சுருக்கம்:

2.1 மேல்முறையீட்டாளர் தனது சித்தாலப்பாக்கம் வீட்டிற்கு ஒருமுனை மின்இணைப்பு வேண்டி இணையதளம் மூலம் விண்ணப்ப கட்டணம் செலுத்தி விண்ணப்பித்துள்ளார்.

2.2 தனது விண்ணப்பத்தின் மீது 30 நாட்கள் கடந்தும் எந்த நடவடிக்கையும் இல்லாததால் இழப்பீடு வேண்டி மனு சமர்ப்பித்துள்ளார்.

2.3 50 நாட்கள் கடந்தும் தனது விண்ணப்பத்தின் மீது மின் குறைதீர் மன்றம், சென்னை மின் பகிர்மான வட்டம்/தெற்கு–II எந்த நடவடிக்கையும் எடுக்காததால் மேல்முறையீட்டாளர் தனது விண்ணப்பத்தை மின்குறைதீர்ப்பாளரிடம் சமர்ப்பித்துள்ளார்.

### 3.0 மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை:

3.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 28.10.2020 அன்று காணொளி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

3.2 மேல்முறையீட்டாளர் திரு.K.செந்தில்குமார் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

3.3 எதிர்மனுதாரர் சார்பாக திரு.M.S.பாரிராஜ்/செயற்பொறியாளர்/இ&ப/தாம்பரம், சென்னை மின்பகிர்மான வட்டம்/தெற்கு-II தன்னுடைய தரப்பு வாதத்தை எடுத்துரைத்தார்.

3.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின் குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்மந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்மந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

**4.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்:</u>**

**4.1** மேல்முறையீட்டாளர் தனது சித்தாலப்பாக்கம் வீட்டிற்கு ஒருமுனை மின் இணைப்பு சர்விஸ் வேண்டி online fill up செய்து விண்ணப்ப கட்டணம் முழுவதும் செலுத்தியதாகவும், **60** நாட்கள் கடந்தும் மின் இணைப்பு வழங்கப்படவில்லை என தெரிவித்துள்ளார்.

**4.2** **60** நாட்கள் கடந்த நிலையில் இழப்பீடு வேண்டி தனது **23.05.2020** நாளிட்ட மனுவை தலைவர், மின்குறைதீர் மன்றம், சென்னை மின்பகிர்மான வட்டம்/ தெற்கு–II அவர்களிடம் சமர்ப்பித்துள்ளார்.

**4.3** online filling க்கு காலையில் விண்ணப்பம் மறுநாள் மாலையில் மின் இணைப்பு என்று விளம்பரம் செய்யப்பட்டதை தொடர்ந்து online fill up செய்ததாகவும் **60** நாட்கள் கடந்தும் மின் இணைப்பு வழங்கப்படவில்லை எனவும் விண்ணப்பித்துள்ளார். எனவே உரிய விசாரணை மேற்கொண்டு உரிய இழப்பீடு வழங்க மேல்முறையீட்டாளர் வேண்டுகிறார்.

**5.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்:</u>**

5.1 The respondent has stated that the appellant has applied through online requesting an additional service for his building under domestic tariff on 21.3.2020 vide acknowledgement No. 2000931503201074 and paid registration fee and has attached a copy of settlement document and his photo.

5.2 The respondent has stated that while processing the online applications, Assistant Engineer/O&M/Sithalapakkam has visited the premises and found that the additional service connection required for the house in the second floor. Further, the following 9 service connections were available in that premises and stands in the name of the petitioner.

i) 315/007/871-V, ii) 315/007/872-V, iii) 315/007/874-V, iv) 315/007/988-IA v) 315/007/873-IA, vi) 315/007/986-IA, vii) 315/007/987-IA, viii) 315/007/193-IA and ix) 315/007/99-IA.

5.3 Further, the approved plan copy from the local panchayat for the construction of second floor submitted by the consumer shows that construction of a house partly in the second floor and open terrace in the third floor. But the consumer has constructed the entire second floor and a house in the third floor.

Since this was not in compliance with the approved plan, the revised plan approval copy along with the Completion Certificate was requested from the consumer, and his application was cancelled on 17.07.2020.

5.4 The respondent has further stated that as per CE/Commercial instruction dated 14.05.2017, when a building exceeds ground floor plus 3 floors, the intending consumer or an applicant has to produce the approved plan copy while initiating the application process and on completion of the construction activities, they have to produce a completion certificate from the competent authority before effecting of service connections. However the petitioner has not fulfilled the requirements till now. Since, the cancellation of the application is in order, the respondent has prayed to pass an order to drop the compensation as the petitioner has not producted the basic documents to process the electricity supply requirement.

**6.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு :</u>**

மேல்முறையீட்டாளர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர்களின் வாதங்களை கேட்ட பிறகு, கீழ்கண்டவைகள் வழக்கெழு வினாக்களாக தெரிகின்றன.

(i) மேல்முறையீட்டாளர் புதிய மின் இணைப்பு கோரும் வளாகம் தரைத்தளம் மற்றும் மூன்று அடுக்குகள் கொண்டதால் அந்த வளாகத்திற்கு கட்டுமான நிறைவு சான்றிதல் பெற்று சமர்பித்தால் மட்டுமே மின்னிணைப்பு வழங்க இயலும் என்ற எதிர்மனுதாரரின் வாதம் ஏற்புடையதுதானா?

(ii) மேல்முறையீட்டாளரின் வேண்டுகோளின்படி மின்னிணைப்பு வழங்காமல் காலதாமதம் ஏற்பட்டதிற்கு இழப்பீடு வழங்கவேண்டும் என்பது ஏற்புடையதா ?

**7.0 <u>வழக்கெழு வினா ஒன்றிற்கான தீர்வு :</u>**

7.1 மேல்முறையீட்டாளர் தன்னுடைய வாதத்தில் தனது சித்தாலப்பாக்கம் வீட்டிற்கு ஒருமுனை மின் இணைப்பு சர்விஸ் வேண்டி online fill up செய்து விண்ணப்ப கட்டணம் முழுவதும் செலுத்தியதாகவும், 60 நாட்கள் கடந்தும் மின் இணைப்பு வழங்கப்படவில்லை என தெரிவித்துள்ளார்.

7.2 எதிர்மனுதாரர் தன்னுடைய வாதத்தில் 21.03.2020 அன்று இணைய வழியில் மின்னிணைப்பு கோரி மேல்முறையீட்டாளரிம் விண்ணப்பம் பெறப்பட்டதாகவும், அந்த விண்ணப்பத்தின் பேரில் கள ஆய்வு மேற்கொண்டபொழுது மேல்முறையீட்டாளர் மின்னிணைப்பு கோரும் வளாகம் இரண்டாவது தளத்தில் அமைந்துள்ளதாகவும், ஆனால் கட்டுமான அனுமதி வரைபடத்தில் இரண்டாவது தளத்தில் ஒரு பகுதிக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் ஆனால் இரண்டாவது தளம் முழுவதுமாகவும் மற்றும் மூன்றாவது தளத்தில் ஒரு கட்டிடம் கட்டப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

7.3 மேலும் தலைமைப்பொறியாளர் / வணிகம் அவர்களின் 14.05.2017 நாளிட்ட குறிப்பாணையின்படி ஒரு நாள் மின்னிணைப்பிற்கு நுகர்வோர் விண்ணப்பிக்கும் பொழுது வளாகத்தில் தரைதளத்தோடு கூடிய மூன்று தளங்கள் அமைக்கப்படவேண்டிய நேர்வில் அனுமதி வழங்கப்பட்ட கட்டிட அனுமதியையும் மற்றும் கட்டுமானம் நிறைவிற்கான சான்றிதழையும் உரிய அத்தாட்சியரிடமிருந்து பெற்று சமர்ப்பிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தனர். மேலும் மேல்முறையீட்டாளரின் மின்னிணைப்பு கோரும் வளாகத்தில் தரைதளத்தோடு மூன்றாவது தளத்தில் கட்டிடம் அமைக்கப்பட்டுள்ளதால் கட்டுமானம் நிறைவிற்கான சான்றிதழ் பெற்று சமர்பித்தால் மட்டுமே மின்னிணைப்பு வழங்க இயலும் என்றும் மேல்முறையீட்டாளர் அச்சான்றிதழை சமர்ப்பிக்காததால் அவருடைய விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

7.4 இவ்வழக்கில் எதிர்மனுதாரர் மேல்முறையீட்டாளரின் மின்னிணைப்பு கோரும் வளாகத்தில் தரைதளம் மற்றும் அதன்மேல் மூன்றடுக்கு கட்டிடம் (Ground + 3) அமைக்கப்பட்டுள்ளதால் கட்டுமானம் நிறைவிற்கான சான்றிதழ் பெற்று சமர்பித்தால் மட்டுமே மின்னிணைப்பு வழங்க இயலும் என்று தெரிவித்துள்ளார். கட்டுமான நிறைவு சான்றிதழ் பெற்று சமர்ப்பிப்பது சம்பந்தமாக மின்குறைதீர்ப்பாளரால் ஏற்கனவே மேல்முறையீட்டு மனு எண்.99/2015 ல் மிக விளக்கமாக தீர்ப்புரை வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு வழங்கப்பட்ட தீர்ப்பாணைக்கு பின் உரிமதாரரால் Memo No. CE/Comml/ SE/Comml/EE3/AEE2/F.Plg.Per/D.175/2017, dt.04-05-2017 என்ற குறிப்பாணை வழங்கப்பட்டுள்ளது. அக்குறிப்பாணையில் கட்டிட அனுமதி சம்பந்தமாகவும், கட்டுமான நிறைவு சான்றிதழ் சம்பந்தமாகவும் வழிகாட்டுதல் வழங்கப்பட்டுள்ளது.

7.5 மேல்முறையீட்டாளர் மின்னிணைப்பு வேண்டி 21.03.2020–ல் விண்ணப்பத்தபொழுது உரிமதாரரின் Memo No. CE/Comml/SE/Comml/EE3/AEE2/ F.Plg.Per/ D.175/2017, dt.04-05-2017 என்ற குறிப்பாணை நடைமுறையில் இருந்தததது. அந்தக்குறிப்பாணையானது மேல்முறையீட்டு மனு எண்.99/2015–ல் மின்குறை தீர்ப்பாளர் வழங்கிய ஆணை மற்றும் உயர்நீதி மன்றம் 23.08.2006 அன்று W.P.No.18898 of 2000 and batch –ல் வழங்கிய தீர்ப்புரையின்படியும் வழங்கப்பட்டுள்ளது. அதன்பிறகு தமிழ்நாடு அரசின் Tamil Nadu Combined Development and Building Rules, 2019 மற்றும் G.O.(Ms) No.18 (MA.I), dated 04-02-2019 என்ற ஆணையின்படி உரிமதாரர் மின்னிணைப்பிற்கான கட்டிட அனுமதி மற்றும் கட்டுமான நிறைவு சான்றிதழ் பெறுதலுக்கான வழிகாட்டுதலை 14.05.2020 நாளிட்ட குறிப்பாணையில் வழங்கியுள்ளது. அந்தக்குறிப்பாணையில் 04.02.2019–ற்கு முன்பு அனுமதிபெற்று கட்டப்பட்டு வரும் கட்டிடங்களுக்கு 04.05.2017 அன்று வழங்கிய குறிப்பாணையின் வழிகாட்டுதல்களை பின்பற்றுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி தரைதளம் மற்றும் அதன்மேல் கட்டப்பட்டுள்ள மூன்று தளங்கள் உள்ள (Ground + 3) கட்டிடம் Special building என்ற வரையறைக்குள் வருகிறது.

7.6 மேற்கண்ட பத்திகளில் உள்ள தீர்வுகளின்படி இவ்வழக்கில் மேல்முறையீட்டாளரின் வளாகத்தில் கட்டிட அனுமதிக்கு மாறாக தரைதளத்திலுள்ள கட்டிடத்தின்மேல் மூன்றாவது தளமும் அமைக்கப்பட்டுள்ளதால் மேல்முறையீட்டாளரின் கட்டிடம் Special building என்ற வரையறைக்குள் வருகிறது. எனவே, அவ்வாறு அமைக்கப்பட்ட கட்டிடத்திற்கு முறையான அனுமதி மற்றும் கட்டுமானம் நிறைவிற்கான சான்றிதழ் ஆகியவற்றை உரிய அதிகார அமைப்பிடம் பெற்று சமர்பித்தால் மட்டுமே மின்னிணைப்பு வழங்க இயலும் என்ற எதிர்மனுதாரரின் வாதம் எனக்கு ஏற்புடையதாக உள்ளது. எனவே, மேல்முறையீட்டாளரின் விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டது விதிமுறைகளின்படி சரியே என்று தீர்வு செய்யப்படுகிறது.

**8.0 <u>வழக்கெழுவினா இரண்டிற்கான தீர்வு :</u>**

8.1 மேல்முறையீட்டாளர், உரிமதாரர் காலையில் விண்ணப்பம் மறுநாள் மாலையில் மின் இணைப்பு என்று விளம்பரம் செய்யப்பட்டதை தொடர்ந்து இணைய வழியில் விண்ணப்பம் செய்ததாகவும் 60 நாட்கள் கடந்தும் மின் இணைப்பு வழங்கப்படவில்லை என்பதால் விசாரணை மேற்கொண்டு உரிய இழப்பீடு வழங்க வேண்டுகிறார்.

8.2 வழக்கெழு வினா 1–ற்கான தீர்வின்படி மேல்முறையீட்டாளரின் வளாகத்தில் உள்ள கட்டிடத்தில் மூன்றாவது தளமும் அமைக்கப்பட்டுள்ளதால் மேல்முறையீட்டாளரின் கட்டிடம்

Special building என்ற வரையறைக்குள் வருகிறது. மேல்முறையீட்டாளர் மின்னிணைப்பு கோரி விண்ணப்பிக்கும் பொழுது கட்டுமான நிறைவு சான்றிதழ் பெற்று சமர்ப்பிக்காத நேர்வில் அவருடைய விண்ணப்பம் எதிர்மனுதாரர்களால் ரத்து செய்யப்பட்டுள்ளது.

**8.3** இவ்வழக்கில் மேல்முறையீட்டாளரின் மின்னிணைப்பு கோரும் விண்ணப்பம் தமிழ்நாடு மின்பகிர்மான விதி **27(1)**ன்படி முழுமையாக உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை என அறியவருவதால் மேல்முறையீட்டாளரின் இழப்பீடு சம்பந்தப்பட்ட கோரிக்கைக்கு நிவாரணம் ஏதும் வழங்க தேவையில்லை என தீர்வு செய்யப்படுகிறது.

**9.0** **<u>முடிவுரை:</u>**

**9.1** என்னுடைய வழக்கெழுவினா ஒன்றிற்கான தீர்வின்படி மேல்முறையீட்டாளரின் வளாகத்தில் கட்டிட அனுமதிக்கு மாறாக தரைதளத்திலுள்ள கட்டிடத்தில் மூன்றாவது தளமும் அமைக்கப்பட்டுள்ளதால் மேல்முறையீட்டாளரின் கட்டிடம் Special building என்ற வரையறைக்குள் வருகிறது. எனவே, அவ்வாறு அமைக்கப்பட்ட கட்டிடத்திற்கு முறையான அனுமதி மற்றும் கட்டுமானம் நிறைவிற்கான சான்றிதழ் ஆகியவற்றை உரிய அதிகார அமைப்பிடம் பெற்று சமர்பித்தால் மட்டுமே மின்னிணைப்பு வழங்க இயலும் என்ற எதிர்மனுதாரரின் வாதம் எனக்கு ஏற்புடையதாக உள்ளது. எனவே, மேல்முறையீட்டாளரின் விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டது விதிமுறைகளுக்கு இணங்க உள்ளது என்று முடிவு செய்யப்படுகிறது.

**9.2** வழக்கெழு வினா இரண்டிற்கான தீர்வின்படி மேல்முறையீட்டாளரின் மின்னிணைப்பு கோரும் விண்ணப்பம் தமிழ்நாடு மின்பகிர்மான விதி **27(1)**ன்படி முழுமையாக உரிய ஆவணங்களுடன் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதால் மேல்முறையீட்டாளரின் இழப்பீடு சம்பந்தப்பட்ட கோரிக்கைக்கு நிவாரணம் ஏதும் வழங்க தேவையில்லை என முடிவு செய்யப்படுகிறது.

**9.3** மேற்கண்ட தீர்வுடன் மேல்முறையீட்டு மனு எண். **32/2020** முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

(செ.தேவராஜன்)
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்

1. திரு.K.செந்தில்குமார்,
த/பெ. பா.குப்புராவ்,
எண்.11/5, 2வது தெரு,
திருவள்ளுவர்புரம்,
தாம்பரம் (மேற்கு),
சென்னை– 600 045.

2. மேற்பார்வைபொறியாளர்,
சென்னை மின் பகிர்மானவட்டம்/தெற்கு–II,
தமிழ்நாடு மின் உற்பத்திமற்றும் பகிர்மானகழகம்,
110 KV, துணை மின் நிலையவளாகம்,
கே.கே. நகர், சென்னை – 600 078.

3. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Mail
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

4. செயலாளர், – By Mail
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – 600 032.